வசூல் சிரமமாக இருக்கிறது. ஆகவே, சந்தைகளை ஏலம் விட்டு 15 சத விகிதம் லைசென்ஸ் தொகையைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்களுக்கு வருமானம் வரவேண்டும் என்று சொல்லியிருக்கும் யோசனை நல்லதுதான். ஆனால், தனியார் நடத்தும் சந்தைகளை மாற்றப் போனால், வழக்கு மன்றங்களில் வழக்கு போட்டு, அப்படிப் பல கேசுகள் இருப்பதும், சிக்கல் இருப்பதும் தெரியும். அம்மாதிரி பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் வாரச் சந்தைகளை எடுத்து நடத்துகிறோம் என்று தீர்மானம் போட்டு ஜில்லா கலெக்டருக்கு அனுப்பினால், எந்த அளவு நில ஆர்ஜிதம் செய்து, அந்த உரிமையைக் கொடுக்கலாம் என்று பரிசீலனை செய்து கூடுமான வரை உதவி செய்ய முயற்சி செய்யலாம்.

பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவர்கள்

* 190 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவர்கள் எவருக்காவது அண்மையில் சிறைதண்டனை கொடுக்கப் பட்டதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

திரு. பி. முருகையன் : சார், சில பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்களிலே, ஒரு சில கூட்டுமன்றத் தலைவர்களுக்கு கோர்ட்டிலே தண்டனை விதிக்கப்பட்டிருந்தும், தண்டனை பெற்றவர்கள் பதவியில் இருக்கக்கூடாது என்று சட்ட விதிகள் இருந்தும் தொடர்ந்து தலைவராக இருக்கிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்? அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லுகிறார்களே, அது எப்படி என்று அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கேள்வியில் " அண்மையில் " என்றிருந்ததால், 'இல்லை' என்று பதிலளித்தேன். அப்படி தண்டனை அடைந்தவர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது பதவியில் இல்லை. ஆனால், அம்மாதிரி தண்டனை பெற்றவர்கள் பதவியில் இருக்கக் கூடாது என்று தடை இல்லை. அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன, அங்கத்தினருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பஞ்சாயத்தில் பதவி வகிப்பவர்கள், பஞ்சாயத்தில் ஊழல்கள் செய்தார்கள் என்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றால், பதவியிலிருந்து நீக்கப்படுகிறார்கள். ஆனால் தனிப்பட்ட முறையில் தண்டனை அடைந்திருந்தால் பதவியில் நீடித்து வைக்காமல் இருக்க ஏதாவது வழிவகை இருக்கிறதா?

6th August 1966]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இன்றைக்குள்ள பஞ்சாயத்து சட்டத்திலே அதற்கான வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அது பற்றி எழுதியனுப்பினால், திருத்தம் செய்ய யோசிக்கலாம்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTIONS.

1. FASTING OF WORKERS IN THE ELECTRICAL GOODS MANUFACTURING COMPANIES AT SALEM AND ERODE.

திரு. து. ப. அழகமுத்து : கனம் அவைத் தலைவர் அவர்களே, சேலம், ஈரோடு மின்சாரக் கம்பெனித் தொழிலாளர்கள் பஞ்சப்படி, சம்பள உயர்வு வேண்டும் என்று 17-5-1966 முதல் உண்ணாவிரதம் இருந்தும், ஸ்ட்ரைக் செய்தும் வருகிறார்கள். ஆனால், இந்த நியாயமான கோரிக்கைகளை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளாமல் பிடிவாதம் செய்கிறார்கள். இந்த நிலைமை நீடிப்பதால், தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதில் சர்க்கார் தலையிட்டு, ஏதாவது வழிவகை செய்ய வேண்டும் என்று, அந்த நிலைபற்றி விவாதிக்க இந்த சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதற்காக நான் ஒத்திவைப்புப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன்.

* **திரு. மீ. கலியாணசுந்தரம் :** இதிலே இருக்கும் விஷயம் முக்கியமானது. முதலாளிகள் கம்பெனி அட்ஜுடிகேஷன் வேண்டும் என்று கேட்டார்கள். அரசாங்கமும் நீதிபதி தீர்ப்புக்கு விட்டது. முடியும் தருவாயில், நீதிபதி காலவரையறை இல்லாமல் ஒத்திப் போட்டுவிட்டார். பணச் செலவு எவ்வளவு என்று தெரிய வேண்டும் என்று கேட்டு, தீர்ப்பை ஒத்திப் போட்டுவிட்டார். அதனால் பரிகாரம் காணமுடியாத சங்கடமான நிலைமையை ஏற்படுத்திவிட்டார். இதற்கு ஒரே பரிகாரம், அந்த நீதிபதியை மாற்றுவதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அப்படி மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும், இது முக்கியமான பிரச்னை. கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து கொண்டு வந்திருப்பது ரொம்ப நியாயமானது. கனம் முதல் அமைச்சர் ஏதாவது சொல்வதற்கு இருந்தால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறுகின்ற நிலையில் கூட இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்பது தான் என் அபிப்பிராயம். அதற்கென்று ஒரு இயந்திரம் இருக்கிறது. அந்த இயந்திரம் சரியாக இயங்கவில்லை என்றால், அது வேறு விஷயம். ஸ்ட்ரைக், உண்ணாவிரதம் இருப்பது எல்லாம் கூட எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், லேபர் கமிஷனரைக்